பக்கங்கள்: 09 விலை: 20/=

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 22 வியாழக்கிழமை 04.06.2020 கதிர் 79

## முடிவில்லாமல் தொடரும் கொரோனா: இன்று 32 பேர்

கொழும்பு, ஜூன் 04

இலங்கையில் கொரோனா வைரஸ்தொற்றுக்குள்ளாகி இன்று இதுவரை 32 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்மைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,781 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று 66 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர். அவர்களில் கட்டாரி லிருந்து வந்த 19 பேர், பங்களா தேஷிலிருந்து வந்த 14 பேர், குவைத்திலிருந்து வந்த 02 பேர், கடற்படையைச் சேர்ந்த 31 பேர் அடங்குகின்றனர்.

இதேவேளை, தொற்றுக்குள் ளான மேலும் 03 பேர் இன்று குணமடைந்துள்ளனர். 2☞

## அரசை விமர்சிப்பவர்கள் கண்மூடித்தனமாக கைது!

# இலங்கையின் இன்றைய நிலை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையர் கவலை

ஜெனிவா, ஜூன் 04

இலங்கையில் அரசை விமர்சிப்பவர்கள் கண்மூடித்தன மாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்செலெட் அம்மையார் குற்றம்சாட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் நெருக்கடி காணப்படுகின்ற நிலை யில் இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் கருத்துச் சுதந்தி ரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன 2☞



# புத்த மதப் போதனையால் வென்றோம் கொரோனாவை

## பொசன் வாழ்த்தில் இப்படிச் சொல்கிறார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜூன் 04

புத்த மதப் போதனையினைப் பின்பற்றியமையால் கொரோனா பெருந் தொற்றை வெற்றிகொள்ள முடிந்துள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 2☞

## கே.பி. எதற்காக இன்னும் தண்டிக்கப்படவில்லை?

### கேள்வி எழுப்புக்கிறது தேசிய மக்கள் சக்தி

தமிழீழ விடுதலைப் புலிக ளின் சர்வதேச விவகார மற்றும் சொத்துக்களுக்குப் பொறுப்பாக இருந்தவரான கே.பி. என்று அழைக்கப்படும் செல்வராசா பத் மநாதன் ஏன் இன்னும் தண்டிக் கப்படவில்லை என்று ஜே.வி. பி. தலைமையிலான தேசிய மக் கள் சக்தி கேள்வி எழுப்பியுள் ளது.

மத்திய வங்கி நிதி மோசடி வழக்கில் தேடப்படுபவரான அர் ஜுன மகேந்திரனை நாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாக் க க் கருத்துத் தெரிவித்த ஆளும் கூட்டணியின் முக்கிய தலைவ ரான உதய கம்பன்பில, கே.பி யைப் போலவே அர்ஜுனவை யும் கொண்டு வருவோம் என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரி வித்த தேசிய மக்கள் 2☞

## டிராக்டரிலிருந்து விழுந்தவர் சில்லுக்குள் சிக்கி உயிரிழப்பு



கிளிநொச்சி, ஜூன் 04

கிளிநொச்சி - முறிப்புப் பகுதியில் உழவு இயந்திரத் தின் மட்காட்டில் இருந்து பயணித்தவர் தவறி சில்லுக்குள் விழுந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள் ளார். 2☞

## இரணைமடுவில் 13 காவலரண்கள்!

கிளிநொச்சி, ஜூன் 04

கிளிநொச்சி இரணைமடு மற் றும் அதனை அண்டிய சூழலில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுக்க அடையாளம் காணப்பட் டுள்ள 13 இடங்களில் பொலிஸ், இராணுவம், விமானப்படையி னர் ஆகியோரின் காவலரண் களை அமைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய நீர்ப் பாசனத் திணைக்களத்திற்கு பொலிஸ் உத்தியோகத்தரை வழங் கவும் முடிவாகியுள்ளது. 2☞



## கொரோனா பெருந்தொற்றுக்குப் பயந்து

# இந்தியாவிலிருந்து தப்பியோடி மன்னார் வந்த தந்தை, மகள்

இந்தியாவில் கொவிட் - 19 வைரஸ் பரவுவதாக அஞ்சிய ஒரு நபர் மற்றும் அவரது மகள் இந்தியாவில் இருந்து படகு மூலம் தலை மன்னருக்கு வந்த பின்னர் நேற்று மடுப் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

முதலில் மன்னாரில் வசித்த இவர்கள், 1990ஆம் ஆண்டில் போரின் போது தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளு டன் இந்தியாவுக்குச் சென்று தமிழ்நாட்டில் உள்ள அகதி முகா மில் தங்கியிருந்தார்.

இந்தியாவில் கொவிட் - 19 வைரஸ் தொற்று அதிக ஆபத்து இருப்பதாக அஞ்சிய அவர், தனது மூத்த மகளுடன் 2☞

## படைமுகாமுக்கு மேல் பறந்தது மர்ம 'ட்ரோன்'

### பாதுகாப்புத் தரப்பு கலக்கம்

ரந்தெனிகல நீர்த்தேக்கம் மற் றும் இராணுவ முகாமுக்கு மேல் பறந்த மர்ம 'ட்ரோன்' கமெரா தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினால் தீவிர விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

கடந்த 31ஆம் திகதி இரவு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் இந்த 'ட்ரோன்' பறந்தமையினால் குழப்பம் ஏற்பட்டுள்ளது. 2☞

## இந்தியாவிலிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குத் தப்பி வந்தார். தனது மனைவி மற்றும் இளைய மகளைப் பின்னர் அழைத்து வரலாம் என்ற எதிர்பார்ப்புடன் தான் வந்துள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

தந்தை, மகள் இருவரும் தனிமைப் படுத்தல் மையத்திற்கு அனுப்பப்பட்ட னர். தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக் கைகள் முடிந்ததும், நாட்டுக்குள் சட்ட விரோமாக நுழைந்த தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## முடிவில்லாமல் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பிற்பகல் 3 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப் பின்படி, தொற்றிலிருந்து குணம டைந்தவர்களின் எண்ணிக்கை 839 ஆக அதிகரித்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டவர்களில் தற்போது 931 நோயாளிகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை 11 பேர் மரணமடைந்துள்ள னர்.

மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 56 பேர் கண் காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## இலங்கையின் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அவர் கவலை வெளியிட்டுள் ளார்.

பிழையான தகவல்கள் பரவுவதைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் அளவுக்கதிகமானதாகக் காணப்படக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள் ளார்.

ஆசியாவின் பல நாடுகள் ஏற்கனவே போலியான செய்திகள் மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்பான சட்டங்களைக் கொண்டுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தச் சட்டங்கள் காரணமாக மனித உரிமைகள் குறித்த கரிசனைகள் எழுந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டங்கள் வேறு சூழமைவு களில் நியாயபூர்வமான பேச்சுக்களைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொது விவாதம், அரசின் கொள்கைகள் குறித்த விமர்சனம் போன் றவற்றைத் தடுப்பதற்கு இந்தச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற் குப் போலியான செய்திகள் மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்பான சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா காரணமாக இலங்கை உட்பட பல நாடுகளில் தணிக்கைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தகவல்கள் தொடர்பில் தங்கள் கருத்துக்களை வெளியிட்டமைக்காகப் பலர் கண்மூடித் தனமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை, பங்களாதேஷ், கம் போடியா, சீனா, இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளில் பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பதில் பொலிஸ்மா அதிபர் கொரோனா வைரஸ் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதி காரிகளை விமர்சிப்பவர்கள் அல்லது சிறிய குறைபாடுகளைச் சுட்டிக்காட் டுபவர்களைக் கைதுசெய்யப்போவ தாக மிரட்டியுள்ளார்.

அதிகாரிகளை அல்லது கொள்கை களை விமர்சிப்பதற்காகக் கைதுசெய் வது என்பது அரசமைப்புக்கு எதிரான நடவடிக்கையாகும்.

இலங்கையில் முகநூல் பதிவுகளுக் காக அரசால் பலர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் - எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## படைமுகாமுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அவதானித்தவுடன் பாதுகாப்புக் குழுவொன்று அந்தப் பகு திக்கு அனுப்பப்பட்டு விசாரணை மேற் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

ஆயிரம் அடி உயரத்தில் இந்த 'ட்ரோன்' பறந்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இது தொடர்பில் உடனடி விசார ணைகள் மேற்கொள்வதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளுமாறு அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிராக்டரிலிருந்து ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வீடொன்றின் வே லியை உடைத்துக்கொண்டு கோழிக் கூட்டின் மீது மோதியுள்ளது. இதன்போது கூட்டிலிருந்த 30 கோழிகளும் இறந் துள்ளன. நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உழவு இயந்திரம் ஒன்றில் சாரதியும் சாரதிக்கு அருகில் மட்காட்டில் இருந்து மற்றொருவரும் பயணித்துள்ளனர். இதன்போது மட்காட்டில் இருந்து பய ணித்தவர் தவறிக் கீழே விழுந்து சில் லுக்குள் சிக்கியுள்ளார்.

இதனையடுத்து கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வேலியை உடைத்துக்கொண்டு வீட்டு வளவுக்குள் நுழைந்தது அங்கிருந்த கோழி கூட் டின் மீது மோதி நின்றுள்ளது. இதனால் 30 கோழிகளும் உயிரிழந்துள்ளன.

உழவு இயந்திரத்தின் சாரதி அங் கிருந்து தப்பி ஓடியுள்ளார். சம்பவ இடத் திற்குச் சென்ற பொலிஸார் உழவு இயந் திரத்தைக் கைப்பற்றினர்.

உயிரிழந்தவர் 8ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி யோகேஸ் வரன் (வயது - 41) என்ற இரு பிள் ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேபோல் சாரதி மற்றும் உயி ரிழந்தவர் மதுபோதையில் இருந்தி ருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிப் பதுடன், தப்பி ஓடிய சாரதியைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இரணைமடுவில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி - முல்லைத்தீவு பிராந்தி ய பிரதிப் பொலீஸ் மா அதிபர் காரியால யத்தில் சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சர் தலைமையில் இன்று இடம்பெற்ற கலந்துரை யாடலின்போதே இந்தத் தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இரணைமடுக்குளத்தின் வலது, இடது புறங்கள் மற்றும் குளத்தை அண்டிய பகுதிகளில் அதிகளவில் சட்விரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்றுவருகின் றமையையடுத்து பலரும் தங்களின் கடும் கண்டனத்தை வெளியிட்டு வந்த னர்.

இதனையடுத்து நீர்ப்பாசனத் திணைக்களம், கனியவளத் திணைக் களம், மாவட்ட செயலகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரைச் சந்தித்து கலந்துரையா டினர்.

இதன்போது இவ்வாறு இடம்பெறு கின்ற சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க இராணுவம், விமானப்படையினர் ஆகியோருடன் இணைந்து பொலிஸார் அந்தப் பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட 13 இடங்களில் காவரண் களை அமைப்பது என முடிவாகியுள் ளது.

அத்தோடு அடிக்கடி கள விஜயம் மேற்கொள்வதற்காகக் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனத்திணைக்களத்துக்கு பொலீஸ் உத்தியோகத்தர்களை வழங்கவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் தாக்குதல் நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம் - நல்லூர், முத்திரைச் சந்தியில் நின்றவர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட கெமி கும்பலைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களில் மூவரை சாட்சி அடையாளம் காட்டினார்.

அதனையடுத்து 6 சந்தேக நபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 10ஆம் தி கதிவரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றப் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் உத்தரவிட்டார்.

நல்லூர் முத்திரைச்சந்தியில் கடந்த மே 11ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் 10 மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் அடாவடியில் ஈடுபட்டனர்.

வீதியில் சென்றவர்கள் மீதும் முத்தி ரைச் சந்தி திருத்தகத்தில் நின்ற ஓட்டோ மீதும் கண்மூடித்தமாகத் தாக்கினர். பின் னர் அந்தக் குழு அங்கிருந்து தப்பிச் சென் றது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பாசை யூரைச் சேர்ந்த கெமி கும்பலைச் சேர்ந் தவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

அடையாள அணிவகுப்பில் 42 மறி யல்காரர்கள் மத்தியில் சந்தேகநபர்கள் 6 பேரும் நிறுத்தப்பட்டிருந்தனர். கால்க ளில் படுகாயமடைந்த நிலையில் இரு வரின் உதவியுடன் தூக்கிவரப்பட்ட சாட்சி, மூன்று சக்கர வண்டியிலிருந்து சந்தேக நபர்கள் மூவரை அடையாளம் காட்டி னார்.

## கே.பி. எதற்காக இன்னும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் பொதுத் தேர்தல் வேட்பாளரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க, கே.பியைப் போன்று அர்ஜுன மகேந்திர னையும் அழைத்துவருவதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் கூறினாலும் அது சாத்திய மாகாது என்று தெரிவித்தார்.

கண்டியில் உள்ள தனது இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இத னைக் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கே.பி என்கின்ற செல்வராசா பத்ம நாதனை அழைத்துவந்த முறை எமக்கு நன்றாகத் தெரியும். இது சூழ்ச்சி மூலமாக இடம்பெற்றது. மலேசியாவி லிருந்து கே.பியைக் கைது செய்து அழைத்து வந்தது போல அர்ஜுன மகேந்திரனை அழைத்துவர முடி யாது.

இப்போது கே.பிக்கு என்ன ஆனது? நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட்டரா? தண்டிக்கப்பட்டாரா? அவருக்கு சிறந்த வீடு வழங்கப்பட்டுள்ளது. சொகுசு வாழ்க்கை ஏற்படுத்திக்கொடுக்கப்பட் டுள்ளது. இது முற்றுமுழுதாக அரசியல் ரீதியிலான 'டீல்' ஆகும்.

எமது நாட்டுப் குடிமகன் ஒருவர் எந்த அளவில் குற்றம் செய்திருந்தாலும் இந் தியா போன்ற வெளிநாடுகள் அவரைக் கேட்டால் வெறுமனே கொடுத்துவிடு வார்களா? இல்லை.

விடுதலைப் புலிகளின் பணம் உள்ளிட்ட சொத்துக்களை அரசு என்ன செய்தது என்று தெரியாது. கே.பியுடைய சொத்துக்களும் மூடிமறைக்கப்பட்டுள் ளன. அவர் சட்டரீதியாக மலேசியாவி லிருந்து அழைத்துவரப்பட்ட நபரில்லை, ஆனால் இன்றும் அவர் மகிழ்ச்சியாக உள்ளார் - என்றார்.

## புத்த மதப் போதனையால் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமனைவரும் நாடு என்ற வகை யில் ஒன்றிணைந்து செயற்பட்டமை யினாலும், புத்தமதத்தின் போதனை யின் அடிப்படையில் உயரிய பண்புகள், சடங்குகளினைப் பின்பற்றியமையினா லும் இலங்கை அத்தொற்றுநோயை வெற்றிகொள்ளும் பாதையில் பயணிக்க முடிந்துள்ளது. எனினும், இன்னும் குறுகிய காலப்பகுதிக்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் வழங்கும் அறிவு றுத்தல்களின் அடிப்படையில் நாமனை வரும் செயற்பட வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வழங்கிய செய்தி யிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவதஅதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

தேசத்தை நாகரீகமடையச் செய்த, தேசத்தை முதிர்ச்சியடையச் செய்த, தேசத்தை முன்னேற்றிய, தேசத்தைப் பாதுகாத்த புத்தமதத்திற்கு அடிப்படை யாக அமைந்த புனித பொசன் போயா தினம் இம்முறை இரண்டாயிரத்து முன் னூற்றி இருபத்தியெட்டாவது தடவை பிறக்கிறது.

இந்தியாவின் அசோகப் பேரரசரின் ஆசிர்வாதத்துடன் வருகை தந்த மகிந்த தேரர் தலைமையிலான தர்ம தூதுக் குழுவினர், அன்று மிகிந்தலையின் அம் பஸ்தலயவிலிருந்து இரண்டாவது பேதிஸ் அரசருக்குப் பரிசளித்த புனித மதம், கங்கை போன்று குறுகிய காலத்தில் இந்த நாட்டின் மூலை முடுக்குகளிலெல் லாம் பரவிச் சென்றது.

இந்த தர்மவிஜய செய்தியுடன் அறி யாமையினால் மங்கலடைந்து போயி ருந்த சிங்கள தீபம் சத்தியத் தத்துவம் காரணமாக பிரகாசம் பெற்று ஒளி வீசத் தொடங்கியது. அதன் மூலம் குறுகிய காலத்தில் தூய கலாசாரத்தினையும், பண்பாட்டினையும் கொண்ட நாகரீக மடைந்த தேசமாக மாற்றமடைந்தது.

அதன் பிரதிபலனாக இந்நாட்டினை ஒற்று மைப்படுத்திய சிரேஷ்ட இளவரசர்கள், தீரமிகு தளபதிகள், காட்டிலிருந்த பாரிய கருங்கல்லில் அன்பு, கருணை, மன அமைதி போன்ற உயர்ந்த பண்புகளை யும் சேர்த்துச் செதுக்கிய வியப்பூட்டும் கலைஞர்கள், இயற்கையின் அழகினை சொற்களில் வடித்த கவிஞர்கள் போன் றோர் இந்நாட்டினை செழுமைப்படுத்தி னர்.

இம்முறை பொசனின் பிறப்புடன் உலக சுற்றாடல் தினமும் அதே தினத்தில் கொண்டாடப்படுகிறது. எமது மூதாதை யரின் முழு உடம்பிலும் ஒன்றித்துப் போயிருந்த இந்த சீரிய தத்துவம் காரண மாக உயிரினங்கள் உட்பட இயற்கை யின் அனைத்து அம்சங்கள் மீதும் நித மும் அன்பு செலுத்தி, அவற்றைப் பாது காக்கின்ற பலமான தேசமொன்று தோற்றம் பெற்றது.

இன்று அதற்கு மாற்றமாக நடந்து கொண்டமையினால் முழு உலகும் மீண்டும் தம்மை சுயவிசாரணை செய்து கொள்ள வேண்டும் என்பதே கோவிட் - 19 தொற்று எடுத்துக்கூறும் முக்கிய பாடமாகும். நாமனைவரும் நாடு என்ற வகையில் ஒன்றிணைந்து செயற்பட் டமையினாலும், புத்தமதத்தின் போத னையின் அடிப்படையில் உயரிய பண் புகள், சடங்குகளினைப் பின்பற்றிய மையினாலும் இலங்கை அத்தொற்று நோயை வெற்றிகொள்ளும் பாதையில் பயணிக்க முடிந்துள்ளது. இன்னும் சிறிய காலப்பகுதிக்கு சுகாதார மற்றும் பாதுகாப் புப் பிரிவினர் வழங்கும் அறிவுறுத்தல் களின் அடிப்படையில் நாமனைவரும் செயற்பட வேண்டியுள்ளது.

அதன் மூலம் இத்தொற்றினை முழுமையாகத் தோற்கடித்து, நாடு என்ற வகையிலும், நாட்டு மக்கள் என்ற வகை யிலும் முன்னோக்கிப் பயணிக்க முடியும் என நம்புகிறேன். எனவே உயரிய பண் புகளுடன், அனைவருக்கும் அன்பு, கருணை காட்டி இத்தொற்றினை வெற்றி கொள்ள உறுதி பூணுவோம்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# எட்டப்பர்கள் ஆகாதீர்!

என்னதான் தமிழ்த் தலைமைகள் அரசியல் ரீதியாகப் பிரிந்து நின்றாலும், இனத்துக்குப் பெரும் நெருக்கடி என்று வரும்போது அவர்கள் ஒன்றுபட்ட வரலாறு உண்டு.

இலங்கைத் தீவில் பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பௌத்த, சிங்கள மேலாதிக்க ஆட்சி ஆரம்பமான காலம் தொட்டே சிறுபான்மையினருக்கு எதிரான அரச அடக்குமுறை ஒழுங்குபடுத்தப்பட்ட – திட்டமிடப்பட்ட – ஒரு நிகழ்ச்சி நிரலில் கட்டவிழ்ந்தது.

அரச ஒடுக்குமுறைக்கு சட்ட ரீதியாக ஒப்புதலும் நியாயப்படுத்தலும் கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதே 1972ஆம் ஆண்டின் குடியரசு யாப்பு.

சிங்களத்திற்கு அரச கரும மொழி என்ற ஏகத் தகைமையையும், பௌத்த மதத்திற்கு முதன்மை இடம் என்ற சிறப்புரிமையையும் அது வழங்கியது. அதன் மூலம் இந்தத் தீவின் பூர்வீகக் குடிகளான ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் மொழியும் மதமும் புறம் ஒதுக்கப்பட்டு, அடக்கி, ஒடுக்கப்படுவதற்கு நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பு மூலம் சட்ட அங்கீகாரமும் ஒப்புதலும் வழங்கப்பட்டது.

முன்னைய சோல்பரி அரசமைப்பில் 29ஆம் பிரிவின் கீழ் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இருந்த ஏற்பாடும் தூக்கிக் கடாசப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது சிறுபான்மையினரான தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட அனைத்துத் திருத்தங்களும், யோசனைகளும் பரிசீலனைக்குக்கூட ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டன.

அந்த அரசமைப்பு 1972 மே 22இல் நிறைவேற்றப்பட்டது. பேரினவாதத்தின் அடக்குமுறை நாட்டின் மீயுயர் சட்டமாக வரும் பெரும் அரசியல் நெருக்கடியைப் புரிந்து கொண்ட தமிழினத் தலைமைகள் தங்களது அரசியல் வேறுபாடுகளைக் களைந்து இனத்துக்காக ஒன்றுபட்டனர்.

காலங்காலமாக எதிரி சக்திகளாக இயங்கிவந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் கட்சியும் தமக்கு இடையேயான வேறுபாடுகளைக் களைந்துவிட்டு, மலையகத் தமிழ் மக்களின் ஒரே சக்தியாகவிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் சேர்த்துக் கொண்டு 1972 மே 14இல் திருகோணமலையில் கூடி தமிழர் ஐக்கிய முன்னணியாக ஒன்றுபட்டன.

புதிய அரசமைப்பு மூலம் கொண்டு வரப்பட்ட பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டு, முகம் கொடுத்து, மீள்வதற்காக அப்போதைய தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்ட அரசியல் சக்தியாக எழுச்சி பெற்றன.

இரண்டாயிரத்தின் ஆரம்பத்திலும் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் நெருக்கடிக்குள் மூழ்கிய போது, அப்போது களத்தில் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் ஏக சக்தியாக நின்று முகம் கொடுத்துப் போராடிக் கொண்டிருந்த விடுதலை புலிகளுக்கு ஆதரவளித்து, ஊக்குவிக்கும் ஒரே நோக்குடன் ஏனைய தமிழர்களின் அரசியல் சக்திகள் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து நின்றன.

இவ்வாறு தமிழினத்துக்கு ஒட்டுமொத்த நெருக்கடி வந்த போதெல்லாம் தமிழ்த் தலைமைகள் தங்களது அரசியல் வேறுபாடுகளைக் களைந்து விட்டு தமக்குள் ஒன்றுபட்டு நின்று அப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கின்றன.

கிழக்குத் தமிழர் தாயகத்தில் அப்படி ஒரு நெருக்கடி – நெருக்குவாரம் – ஏற்படக் கூடிய பேராபத்து சூழ்ந்திருக்கின்றது.

அங்குள்ள தொல்லியல் விடயங்களில் பாதுகாப்பதற்கு என்ற பெயரில் பாதுகாப்புச் செயலாளரான முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தலைமையில் விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

முற்றும் முழுதாகச் சிங்களவர்களை மட்டும் கொண்டு, முழு அதிகாரத்தோடு இந்தச் செயலணி ஸ்தாபிக்கப்படதன் நோக்கமே கிழக்கை முழுமையாக பௌத்த, சிங்கள மயமாக்குவதுதான். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கிழக்கில் தம்முடைய அரசியல் சுயலாபத்துக்காகப் பேரினவாத சக்திகளுடன் கைகோர்த்து நிற்கும் தமிழர் தரப்புகளுக்கு இந்த நெருக்குவாரத்தின் ஆழம் புரியாது என்று கூறுவதற்கில்லை.

தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகம் பறிபோகும் இந்த ஆபத்துக் கட்டத்தில் 'விடெரிக்கும் ராஜாவுக்கு கொள்ளிக் கட்டை தூக்கிக் கொடுக்கும் மந்திரிகளைப் போல' அவர்கள் செயற்படப் போகின்றார்களா?

கருணா, வியாழேந்திரன், அருண் தம்பிமுத்து போன்றோர் சிந்திக்க வேண்டிய விவகாரம் இது.

எதிர்கால வரலாறு தம்மைத் தூற்றுவதின்றும் தப்புவதற்கு – 'கோடரிக்காம்பு' என்ற அவப்பெயர் சூழ்வதை விடுத்துத் தப்புவதற்கு – அவர்கள் ஏதாவது செய்தாக வேண்டும்.

வரலாறு நிரந்தரமாக அவர்களை 'எட்டப்பர்களாக' அடையாளம் காணுமா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் அவர்கள் இருக்கின்றார்.

# பாடசாலையை மீள ஆரம்பிப்பது குறித்து 10 ஆம் திகதிக்குள் முடிவு

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 04

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து இம்மாதம் 10 ஆம் திகதிக்குள் அரசு முடிவு செய்யும் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர்,

பாடசாலை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்கு இடையில் கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இறுதி முடிவு இன்னமும் எட்டப்படவில்லை.

கல்வி அமைச்சின் குழு ஒன்று அண்மைய நாட்களில் அனைத்து மாகாணங்களுக்கும் சென்று பாடசாலைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் அதிபர்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைச் செயற்படுத்தப்பட வேண்டும். இது குறித்து அனைத்து தனியார் மற்றும் அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.'

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது, அவர்களில் பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். அவர்களால் பாடசாலை மற்றும் பொது பஸ்களில் சமூக விலகலைக் கடைப்பிடிக்க முடியாது.

சுகாதார அதிகாரிகளின் கருத்துப்படி, கொரோனாத் தாக்கம் இருந்தால்கூட அதன் ஆணிவேரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக போக்குவரத்தை ஒதுக்க முடியுமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இது ஒரு சுலபமான காரியம் அல்ல. இருப்பினும் நாங்கள் அதைச் செய்ய முயற்சிக்கிறோம்.

அத்தோடு பாடசாலைகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள சில வழிகாட்டுதல்களில் ஒவ்வொரு வகுப்பறையிலும் நாற்காலிகள் இடையேயான தூரம், மாணவர்கள் அடிக்கடிக் கைகளைக் கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

இருப்பினும், ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் முகக்கவசம் அணிவது நடைமுறையில் இருக்காது – என்றார்.

# நாடு திரும்பியவர்களில் 594 பேருக்கு கொரோனா

## கடற்படை பாதிப்பு 802 ஆக எகிறியது

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 594 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பி வந்தவர்கள் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 839 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 802 பேர் கடற்படையினர் எனவும், அவர்களில் 426 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## மனவளர்ச்சி குன்றிய சிறுவன் மீதான

# பொலிஸாரின் துன்புறுத்தல் குறித்த விசாரணை ஆரம்பம்

அளுத்கம – தர்கா நகரில் தாரிக் 'ஆர்டிசம்' எனப்படும் மனவளர்ச்சி குன்றிய நோயினால் பாதிக்கப்பட்ட அஹமட் எனும் 14 வயது சிறுவனை பொலிஸார் சிலர் துன்புறுத்தியதாக சமூக ஊடகங்களில் பரவிய காணொலி குறித்த விசாரணைகளை களத்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தொடங்கியுள்ளார்.

மே 25ஆம் திகதி மாலை இடம்பெற்றதாக க் கூறப்படும் இந்தச் சம்பவத்தை சமூக ஊடகங்களில் பகிர்ந்த பலரும் இதற்கு நீதி கிடைக்க வேண்டும் என்று குரல் எழுப்பியிருந்தனர்.

இந்த சம்பவம் குறித்த சி.சி.ரி.வி காணொளியை வெளியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, பொலிஸார் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோரின் பாரபட்சமான நடத்தை வெளிப்படுத் தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

தாரிக்குக் 'ஆர்ட்டிசம்' நோய் 4 வயதிலிருந்தே இருக்கின்றது என்பது மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அ வர், பொலிஸாரின் துன்புறுத்தலால் இளைஞனுக்கு கடுமையான காயங்கள் உடலில் ஏற்பட்ட போதிலும் அச்சம் காரணமாக அன்றைய தினம் வைத்தியசாலைக்கு செல்லவில்லை, பின்னரே சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் பரீட்சை நடைமுறையில் மாற்றம்

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பரீட்சை நடைமுறையில் மாற்றம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான செய்முறை பரீட்சைகளை நடத்துவதற்கு தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி ரத்து செய்யப்படுகிறது.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இவ்வாறு அனுமதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்முறைப் பரீட்சை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென மோட்டார் வாகன பரிசோதகர் சங்கம், போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கோரியிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சினால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி சாரதி அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான செய்முறைப் பரீட்சையை நடத்துவதற்கு தனியார் துறையினருக்கு 2017 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் வழங்கியிருந்த அனுமதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இணைய கல்வி வசதி இல்லாத ஏழைச் சிறுமியின் சோக முடிவு

கேரளா,ஜூன்.4

கொரோனாவைரஸ்காரணமாகப்பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் நிலையில் இணையத்தொடர்பு (ஒன்லைன்) மூலம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இவ்வகையில் கற்றலில் ஈடுபடுவதற்கு வசதியில்லாத காரணத்தால் இந்தியாவின் கேரளா மாநிலத்தில் 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்துள்ளார். கேரளாவின் மலப்புரம் மாவட்டம், இரும்பிலியம் ஊராட்சியில் உள்ள அரச உயர் நிலைப் பாடசாஜலையில் கல்வி கற்கின்ற இந்த மாணவி, தன்னால் இணைய வகுப்புகளைக் கவனிக்கமுடியவில்லை என்ற கவலையில் இருந்துள்ளார். இந்த நிலையில் தனக்குதத் தீவைத்துக் கொளுத்தியுள்ளார். இவ்வாறான பாதகத் தன்மையால் தற்போதைய - தற்காலிக இணைய வகுப்பகள்; குறித்த சமூகத் தாக்கம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. மடிக்கணினியோ, அலைபேசியோ அனைவரிடமும் இல்லை. அடிமட்ட மக்களின் நிலையில் இருந்து கல்வியைப் பார்க்கவேண்டும் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஒரே நாளில் 9000!

புதுடெல்லி,ஜூன்.4

இதுவரையில்லாத வகையில் ஒரேநாளில் 9ஆயிரத்து 304 பேருக்கு இந்தியாவில் கொரோனாத் தொற்று அறியப்பட்டுள்ளது. உயிரிழப்பு 260 ஆக உயர்ந்துள்ளது என இந்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால் இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 16 ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளது. குணமடைந்தோர் ஒரு லட்சத்து 4ஆயிரத்து 106 ஆக உயர்ந்துள்ளது, சிகிச்சை பெற்றுவருபவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து737 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 260 பேர் சாவடைந்ததையடுத்து, சாவு எண்ணிக்கை 6 ஆயிரத்து 75ஆக அதிகரித்துள்ளது. இன்று காலை 9 மணி நிலவரப்படி இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி மகாராஷ்டிர மாநிலத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 74ஆயிரத்து 860 ஆக அதிகரித்துள்ளது. குணமடைந்தோர் எண்ணிக்கை 32ஆயிரத்து 329 ஆக உயர்ந்துள்ளது.

2ஆவது இடத்தில் உள்ள தமிழகத் தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 872 ஆகவும், குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 14ஆயிரத்து 316 ஆகவும் அதிகரித்துள்ளது.

# பாதுகாப்பு செயலருக்கும் இந்தியாவில் கொரோனா



புதுடெல்லி, ஜூன்.4

இந்திய மத்திய பாதுகாப்புத் துறைச் செயலர் அஜய் குமாருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அவருடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஆனால் அஜய் குமாரின் உடல்நிலை சீராக இருக்கிறது. அவர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகப் பாதுகாப்புத்துறை அமைச்சத் தரப்புகள் தெரிவிக்கின்றன.

அஜய் குமாருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, நாடாளுமன்றத்தின் தெற்கு வளாகத்தில் அமைந்துள்ள ரெய்ஸானா ஹில்ஸ் பாதுகாப்பு அமைச்சக அலுவலகத்தில் 35 ஊழியர்களும் வீட்டுக்கு அனுப்பப்பட்டு தனிமைப்படுத்திக்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேபோல மத்திய சட்டத்துறை அமைச்சகத்தில் இணைச் செயலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் இணைச் செயலருடன் நேரடியாகத் தொடர்பில் இருந்த மூத்த அதிகாரிகள், ஊழியர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை தனிமைப்படுத்திக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க தலைநகரில் காந்திக்கு அவமதிப்பு

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரகம் அருகே அமைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி சிலையை இனம்தெரியாத நபர்கள் சேதப்படுத்தி அவமதித்துள்ளனர். இதனால் அந்தச் சிலை துணியால் மூடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வோஷ்ரீங்டனில் உள்ள இந்தியத் தூதரகம் அருகே உள்ள காந்தி சிலையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு அவமதிக்கப்பட்டுள்ளது. காந்தி சிலையை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்ட நபர்கள் யார்? என்பது குறித்துப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். போராட்டக்காரர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.





# இந்தியா - சீனா இடையே பேச்சு

புதுடெல்லி,ஜூன்.4

இந்தியா - சீனா எல்லையில் நிலவிவருகின்ற பதற்றத்



தைத் தணிப்பதற்காக இரண்டு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் இருவரும் எதிர்வரும் 6ஆம் திகதி பேச்சுகளில் ஈடுபடவிருக்கின்றனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்தியா - சீனா இடையிலான 3 ஆயிரத்து 488 கிலோ மீற்றர் நீள எல்லையில் பல்வேறு இடங்களில் எல்லைப் பிரச்சினை நிலவி வருகிறது. லடாக் பிரதேசத்தில், எல்லைக் கோடு அருகே பன்காங் ஏரி பகுதியிலும், கல்வான் பள்ளத் தாக்குப் பகுதியிலும் இந்தியா வீதிகளை அமைத்து வருகிறது. சீனா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. கடந்த மாதம் 5ஆம் திகதி இரு தரப்புக்கும் இடையே மோதல் நடந்தது. இதில் சிலர் காயமடைந்தனர். இதைத்தொடர்ந்து, இரண்டு நாட்டு இராணுவத்தினரும் எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளதால், அங்கு சுமார் ஒரு மாதமாகப்பதற்றம்நிலவுகிறது. இதற்குத் தீர்வு காண்பதற்குக் கடந்த 2ஆம் திகதி, உயர் அதிகாரிகள் இடையே பேச்சுகள் நடந்தன. அதில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து, எதிர்வரும் 6ஆம் திகதி உயர்மட்ட பேச்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. லடாக்கில் சுசுல் மோல்டோ என்ற இடத்தில் இந்தப் பேச்சுகள் நடக்கும் என்று கூறப்படுகிறது. இதை இந்திய இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதிப்படுத்தினார்.

# தொழில் அதிபர்களை வரவேற்கிறது இந்தியா

புதுடெல்லி,ஜூன்.4

கொரோனாவைரஸ்காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வெளிநாட்டுத் தொழில் அதிபர்கள் இந்தியாவுக்குள் நுழைவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அங்கு ஊரடங்கு இந்த மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தொடர் ஊரடங்கால் புதிய தொழில்நிறுவனங்கள் தொடங்கப்படவில்லை. அந்நிய முதலீடுகள் புதிதாக வரவில்லை. பொருளாதாரமும் சீர்குலைந்துள்ளது.

இந்தநிலையில்,கொரோனா ஊரடங்குக்கு பின்னர் முதல் முறையாக வெளிநாட்டுத் தொழில் அதிபர்கள், இந்தியாவுக்குள் நுழைவதற்கு இந்திய அரசால் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.




## ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொலை விவகாரம்

# மேலும் 3 பொலிஸார் மீது குற்றச்சாட்டுகள் பதிவு





நியூயோர்க், ஜுன் 04

அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃபிளாய்ட்டின் சாவுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மீது புதிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜோர்ஜ் ஃபிளாய்ட்டின் சாவுக்கு நேரடிக் காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கழுத்தில் காலை வைத்து நெரித்த பொலிஸ் அதிகாரியான டெரெக் சாவின் மீது மாத்திரமே வழக்கும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

தற்போது ஏனைய பொலிஸ் அதிகாரிகள் மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலைக்கு உடந்தையாக இருந்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டெரெக் சாவின் மீது தொடரப்பட்ட வழக்கு தற்போது இரண்டாம் நிலை கொலை (திட்டமிடப்படாத கொலை) என்ற குற்றச்சாட்டாக மாற்றமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் நிலைக் கொலைக் குற்றம் உறுதிசெய்யப்பட்டால் குற்றவாளிக்கு அதிகபட்சம் 40 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

புதிதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுப் பணிநீக்கம் செய்யப்பட்ட தோமஸ் லேன், ஜே அலெக்சாண்டர் குயெங் மற்றும் டூ தாவோ ஆகிய மூவர் மீதுமே கொலைக்கு உடந்தையாக இருந்தனர் என்று இருவேறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் நடந்துவருகின்ற எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தச் செயலே அரச இயந்திரத்தின் கையிலுள்ள தற்காலிகத் தீர்வு என்று அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## தியானன்மென் படுகொலை

# சீனாவின் தடைகளையும் மீறி ஹொங்கொங்கில் நினைவேந்தல்

ஹொங்கொங், ஜுன் 04

1989ஆம் ஆண்டு சீனாவின் தலைநகர் பீஜிங்கிலுள்ள தியனன்மென் சதுக்கத்தில் சீனப் படையினர் நிகழ்த்திய படுகொலைகளை நினைவுகூரும் வகையில் ஹொங்கொங்கில் மக்கள் நகரம் முழுவதும் மெழுகுவர்த்திகளை ஏற்றினர்.

தியனன்மென் குறித்த நிகழ்வுகளுக்குச் சீனா



தொடர்ந்து எதிர்ப்பையும் தடையையும் ஏற்படுத்தி வரும் சூழலில் ஹொங்கொங் அதை நினைவு கூர்ந்திருக்கிறது. இந்தச் சம்பவம் ஹொங்கொங் தன்னாட்சி நகரம் என்பதை வெளிப்படுத்துகிறது என்றும் இதன் மூலம் சீன அரசு ஹெங்கொங்கின் சுதந்திரங்களை நசுக்கும் என்றும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஹொங்கொங் மற்றும் மற்றொரு தன்னாட்சி நகரமான மக்காவ் ஆகியவற்றில் உள்ள மக்களை தியனன்மென் ஒடுக்குமுறையை நினைவுகூர அனுமதிக்குமாறு சீனாவிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜோர்ஜ் ஃபிளாய்ட் சாவு பிரி. பிரதமர் கண்டனம்



லண்டன், ஜுன் 04

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ச் ஃபிளாய்ட் கொல்லப்பட்டதற்குப் பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் கண்டனம் தெரிவித்துள்ளார். ஜோர்ச் ஃபிளாய்ட்டின் சாவு அமெரிக்காவில் மட்டுமன்றி உலகம் முழுதும் பெரும் போராட்டங்களுக்கு வழிவகுத்துள்ள நிலையில் போரிஸ் ஜோன்சனின் இந்தக் கண்டணம் தாமதமாக வெளிவந்திருக்கிறது. இதுகுறித்துப் போரிஸ் ஜோன்சன் கூறும்போது, ' அமெரிக்காவில் நடப்பது அச்சப்படக்கூடியது. ஏற்றுக் கொள்ள முடியாதது. போராட்டங்கள் நடத்தும் மக்களின் மன நிலையை நாங்கள் புரிந்துகொள்கிறோம். மேலும் போராட்டங்கள் நியாயமான முறையில் நடக்கும் என்றும் நம்புகிறேன் - என்றார். ஜோர்ச் பிளாய்ட்டின் சாவு குறித்துப் பிரிட்டன் வாய் திறக்காமல் இருப்பது கண்டனத்துக்குரியது என்று பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மருந்தாக மீள குளோரோகுயின்

ஜெனீவா, ஜுன் 4

கொரோனா வைரஸ் பாதிப்பு மற்றும் உயிரிழப்பைக் கட்டுப்படுத்துவதற்கு ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மருந்தைப் பயன்பாத்தவும், கொரோனா வைரஸுக்கான அனைத்துத் தடுப்பூசிப் பரிசோதனைகளுக்கும் ஹைட்ரொக்ஸி குளோரோ குயினைப் பயன்படுத்;துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரெயெசஸ் தெரிவித்தார். தற்போது கிடைத்துள்ள பரிசோதனைத் தரவுகளின் அடிப்படையில், கோவிட் - 19 நோய்த்தொற்றுக்கு எதிரான தடுப்புவழிமுறையைக் கண்டறியும் சோதனை நெறிமுறையை ஹைட்ரொக்ஸி குளோரோ குயினிலிருந்து மாற்றுவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை என்று சோதனைத் தரவுப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே, ஹைட்ரொக்ஸி குளோரோ குயின் பயன்பாடு உட்பட, நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டு செய்யப்படும் சோதனையின் அனைத்தையும் தொடர்வதற்கு நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளது,' என்று இதுதொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலேரியா நோய்த்தடுப்புக்கு பயன்படும் ஒருவகை மருந்தான ஹைட்ரொக்ஸி குளோரோ குயினை கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுப் பாதிப்புக்கும் பயன்படுத்தலாம் என்ற கருத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்டோர் கூறி வரும் நிலையில் உலக சுகாதார அமைப்பு இந்தத் தகவலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவை விமர்சிப்பதற்கு அமெ.வுக்கு தகுதி இல்லை

## வட கொரியா தெரிவிப்பு

சியோல்,ஜுன் 04

உள்நாட்டில் இனவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு இராணுவத்தைக் களமிறக்குவேன்; என்று அச்சுறுத்திக்கொண்டு, ஹொங்கொங் விடயத்திலும், மனித உரிமைகள் தொடர்பாகவும் சீனாவை விமர்சிப்பதற்கு அமெரிக்காவுக்குத் தகுதி இல்லை என்று வட கொரியா தெரிவித்துள்ளது. அத்தோடு வட கொரியா அரசு நடத்தும் செய்தித்தாள் ஒன்றின் கட்டுரையில், ஆளும் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த வட கொரியாவின் பன்னாட்டு விவகாரத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர், அமெரிக்க அயலுறவுத்துறைச் செயலர் மைக் பாம்பியோ அண்மையில் வெளியிட்ட கருத்துக்களை விமர்சித்தார். சீனா கொம்யூனிஸ்ட் கட்சியின் சமீபத்திய நடவடிக்கைகள் மேற்கத்திய கருத்துக்கள், மேற்கத்திய ஜனநாயகங்கள், மேற்கத்திய விழுமியங்களை அழிப்பதற்கான நோக்கம் என்று கூறியிருந்தார் பாம்பியோ. இந்த நிலையிலேயே ஹொங்காங், தாய்வான், மனித உரிமைகள் மற்றும் வர்த்தக மோதல்கள் பற்றிய பாம்பியோவின் கருத்துக்கள்'முட்டாள்தனமானவை, அவை சீனா கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை அவதூறாகச் சித்திரிக்கின்றன என்று குறித்த செய்தித் தொடர்பாளர் கூறினார்.

# அரசியலில் நடிப்பதற்கே விரும்பாதவராம் மஹிந்த

கொழும்பு, ஜூன் 04

**அரசியலுக்காக நடிக்க விரும்பாத ஓர் அரசியல் தலைவர் மஹிந்த ராஜபக்ச என்று தெரிவித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. நல்லிணக்கத்துடன் அனுகினால் அவர் நல்லிணக்கம் காட்டுவார். கடும் போக்குடன் அனுகினால் கடும்போக்கையே கடைப்பிடிப்பார். இது நானும் பிரபாகரனும் அவரிடம் கண்ட அனுபவங்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.**



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஐம்பதாண்டு அரசியல்வாழ்வின்நிறைவுகுறித்துகருத்துதெரிவிக்கையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

நல்லிணக்கம் என்பது சாணாகதி அடைதல், அல்லது அடிமையாக இருத்தல் அல்ல. அர்த்தம். எமது நியாமான கோரிக்கைகளை விட்டுக்கொடுகாமல், நாம் நாமாகவே இருந்து கொண்டு எமது அரசியல் பலத்தில் இணக்கமாக பேசி இழந்தவற்றை பெறுதலே ஆகும்.

அதற்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் கடந்த மஹிந்த ஆட்சி காலத்திலும் சக தமிழ் தரப்பால் அதிகமாக இழக்கப்படிருக்கிறது.

2005 ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என்று என்னிடம் அவர் கேட்டிருந்தார்.

நான் அவருக்கு சொன்னபடி போரை நிறுத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு பேசுவேன் எனப் பகிரங்கமாகக் கூறினார். ஆனால் அது நடக்கவில்லை அது யார் தவறென்று எமது மக்களுக்குத் தெரியும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நிறைறேவேற்றுமாறு கேட்டோம். கிழக்கிற்கு முதலிலும் வடக்கிற்கு பின்னரும் மாகாண சபை தேர்தல்களை நடத்தி அதை தமிழர் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தார்.

சகதிக்குள் புதைந்திருந்த பதின்மூன்றாவது திருத்த சட்டத்தை, மாகாணசபை முறைமையை வெளியே இழுத்து வந்து நகரவைத்தார். அதுமட்டுமல்லாது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதி கூடிய நிதியை ஒதுக்கியிருந்தார்.

சர்வகட்சி மாநாட்டின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணலாம் வாருங்கள் என அதற்கு ஆறு மாத கால அவகாசம் வழங்கி துணிச்சலோடு அழைத்தார்.

இன்று மகிந்தவால் மட்டுமே தீர்வு காண முடியும் என கூறும் சக தமிழ் தரப்பினர் எவரும் அப்போது இணங்கி வர மறுத்துவிட்டனர்,

யதார்த்த வழிமுறைக்கு சகலரும் ஒத்துழைத்து வந்தால் தேசியப் பிரச்சினைக்கும் தீர்வு காணலாம்.

இதுவரைகால ஆட்சியாலார்களில் மிக சக்தி வாய்ந்த ஓர் அரசியல் தலைவர் மகிந்த. அவருக்கு நடிக்கத் தெரியாது. வல்லமையானவர். ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை. வெளிப்படையாகவே கூறிவிடும் உண்மை மனிதர். இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் ஆணையைப் பெற்றவர்.

இவரது ஆட்சியிலேயே அரசியல் தீர்வு உட்பட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் – என்றார்.

# உதைபந்தாட்ட கழகங்களுக்கு கொழும்பில் இருந்து உதவிகள்!

உலக உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு வழங்கப்பட்ட கோவிட் – 19 நிவாரண நிதியிலிருந்து யாழ். உதைப்பந்தாட்ட சம்மேளனத்துக்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உணவு பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று யாழ். உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் இமானுவேல் ஆனல்ட் தலைமையில் யாழ். அரியாலை பகுதியில் அமைந்துள்ள யாழ். உதைப்பந்தாட்ட பயிற்சி மைதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணா உதைபந்தாட்ட சம்மேளனத்தில் உள்ள 33 கழகங்களுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் தரம் ஒன்று பிரிவில் உள்வாங்கப்பட்ட குருநகர் பாடும் மீன், நாவாந்துறை சென்மேரிஸ் அணிகளுக்குத் தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

வேள்வி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளை (05/ 06/2020) தலைப்பு வேள்வி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# வாள், கஞ்சாவுடன் வந்த நபரை மடக்கியது கல்முனைப் பொலிஸ்









ஊரடங்கு நேரத்தில் வாள் மற்றும் கஞ்சா கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கல்முனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மருதமுனைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வருபவர்களால் பாடசாலை மாணவர்களுக்குக் கஞ்சா விற்கப்படுவதாக்கக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தேடுதல் நடத்திய பொலிஸார் இந்த இளைஞரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட பொலிஸார் அவரிடம் கஞ்சா வாங்க விரும்புவதாக க்கூறி நடித்துள்ளனர். அதனை நம்பி அவர்களுக்கு கஞ்சா விற்பதற்காக வாளுடன் இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபரை பொலிஸார் சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 75 சரைகளாக ச் சுற்றப்பட்ட 300 கிராம் கஞ்சா மற்றும் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படும் 2 அடி நீளமான வாள், கைத் தொலைபேசி, டியோ ரக மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மணமகன் தேவை

இந்து வேளாளர், 1992 இல் பிறந்த, கல்வியியல் கல்லூரிப் பயிற்சி பெற்ற, உத்தரட்டாதி 1 ஆம் பாத நட்சத்திர முடைய தங்கள் மகளுக்கு 1986 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த அரச அல்லது வங்கிச் சேவையில் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புக்கு - 077 986 1127

# பாலியல் தொழில் விடுதி நடத்திய பெண்ணுக்கு தண்டம்

## ரூ. 2 லட்சம் விதித்தது அம்பாறை நீதிமன்றம்

அம்பாறை நகரில் பாலியல் தொழில் நிலையம் நடத்தி வந்த பெண்ணுக்கு 2 இலட்சம் ரூபா தண்டப் பணம் செலுத்த உத்தரவிட்டது நீதிவான் மன்றம்.

நீதவானும் மாவட்ட நீபதியுமாகிய ஏ.ஜ.கெட்டிவத்த நேற்று புதன்கிழமை இந்த உத்தரவை விடுத்தார்.

அம்பாறை வைத்தியசாலை வீதி, புத்தங்கல பகுதியில் உள்ள விடுதி ஒன்று நீண்ட பாலியல் தொழில் நிலையமாக நடத்தப்பட்டு வந்துள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் பொலிசாரிடம் முறைப்பாடுகள் தெரிவித்து வந்தனர். இதனையடுத்து இந்த விடுதியைத் தொடர்ந்து கண்காணித்து வந்த பொலிஸார், ஏப்ரல் 21ஆம் திகதி நீதிவானின் அனுமதியைப் பெற்று மறுநாள் விடுதியைச் சுற்றி வளைத்தனர்.

விடுதியில் பாலியில் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரையும்; விடுதியை முகாமைத்துவம் செய்து நடாத்தி வந்த பெண் ஒருவரையும் இந்தச் சுற்றி வளைப்பில் கைது செய்த பொலிஸார் அவர்களை நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

இவர்கள் இருவரையும் மே மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டபோது விடுதி முகாமையாளரான பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு நீதி சட்டத்தில் இருக்கும் அதிகூடிய தண்டப்பணமான இரண்டு இலட்சம் ரூபாவும் விபச்சாரத்தில் ஈடுபட் பெண்ணுக்கு 100 ரூபாவும் தண்டமாக விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனாவுக்கு மத்தியிலும் மட்டு. நகரில் வேகம் எடுத்த போதைப் பொருள் வர்த்தகம்

வை.ந.குகதர்சன்

நாட்டில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில், போதை வியாபாரிகளின் நடவடிக்கையால் கொரோனா வைரஸ் தாக்கத்தைவிட போதைப் பாவனை அதிகரித்து வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் போதை







வியாபாரிகளின் வியாபாரக் கெடு பிடிகளும், போதை பாவிப்பவர்களின் எண்ணிக்கை யும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. இதன் காரணமாக அரசால் கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச்சட்டம் கேள்விக் குறியாகி உள்ளது.

### மட்டக்களப்பில் உச்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாப்பிரதேசத்தில் முஸ்லிம் பகுதிகள் பலவற்றில் போதைப்பொருள் வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன், இதன் காரணமாக, பாவ னையாளர்கள் அதிகரித்த வண்ணமுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில், ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின், போதை மாத்திரைகள், கஞ்சா உட்பட்ட போதைப் பொருள்கள் அதிகளவில் கல்குடா பிரதேசத்தில் விற்பனை செய்யப்படுவதுடன், அங்கு தொடர்ந்து இவ்வகைச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட வண்ணமே காணப்படுகின்றனர். மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள்வதற்காகவும் ஊரடங்குச் சட்டத்தை அரசு நீக்குகின்றது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை இந்தப் போதை வியாபாரிகள் பயன்படுத்தி வெளியிடங்களுக்குச் சென்று போதைப் பொருள்களைக் கொள்வனவு செய்து உள் வீதிகளுக்கூடாகக் கொண்டு வருகின்றனர். பின்னர் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும்போது உள் வீதிகளைப் பயன்படுத்தி கிராமப் புறங்களுக்குப் போதைப்பொருள்களைக் கடத்துவதாகவும், தமது சைக்கிள், மோட்டர் சைக்கிள்களில் பயணித்துச் சில வீடுகளில் ஒன்று கூடுவதும், அங்கு போதைப்பொருள்களைப் பயன்படுத்தி விட்டுக் கலைந்து செல்வதும் நடக்கின்றன.

குறிப்பாக, கல்குடாப் பிரதேசத்தில் ஓட்டமாவடி, மாஞ்சோலை, பிறைந்துறைச்சேனை, செம்மண்ணோடை, நாவலடி ஆகிய பிரதேசங்களில் போதை வியாபாரிகள் இவ்வாறு வருவதாகவும், இப்போதை வியாபாரிகளின் மற்றும் போதைப்பாவனையாளர்களின் நடமாட்டம் ஊரடங்கு நடைமுறையில் உள்ள போது கூடுதலாக இருப்பதாகவும் அந்தப் பிரதேசவாசிகள் மிகவும் கவலையடைகின்றனர்.



> மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள் வதற்காகவும் ஊரடங்குச் சட்டத்தை அரசு நீக்குகின்றது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை இந்தப் போதை வியாபாரிகள் பயன்படுத்தி வெளியிடங்களுக்குச் சென்று போதைப் பொருள்களைக் கொள்வனவு செய்து உள் வீதி களுக்கூடாகக் கொண்டு வருகின்றனர்.

### சில்லறை வியாபாரிகளே அகப்படுகின்றனர்

கல்குடாப்பிரதேசத்தில் பெரும்பாலும் போதைப் பொருள் வியாபாரிகள் கைது செய்யப்படுவதில்லை. குறிப்பாகப் போதைப்பொருள்களை வாங்கி பாவிப்பவர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளே கைது செய்யப்படுகின்றனர். பெரும் வியாபாரிகள் கைதுசெய்யப்படாது,தப்பித்து விடுகின்றனர். கொரோனா அச்சம் காரணமாக நாட்டில் ஊடரங்குச்சட்டம்நடைமுறைப் படுத் தப்பட்ட வேளையில், இராணுவப்புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் பிடிக்கப்படுகின்றனர். அதில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



### மாணவர்களுக்குப் போதை மாத்திரைகள்

கல்குடாப்பிரதேசத்தில் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீறாவோடை, மாஞ்சோலை, பிறைந்துறைச்சேனை, செம்மண்ணோடை, நாவலடி ஆகிய பிரதேசங்களில் போதை மாத்திரைகள் பாடசாலை மாணவர்களுக்கு அதிகம் விற்பனை செய்யப் படுகின்றன. இதனால் மாணவர்களின் வாழ்வு சிறுவயதில் இழக்கப்படும் நிலைமை உருவாகின்றது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில பிரதேசங்களில் போதைப்பொருள்களுடன் பல்வேறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். ஆனால், இவர்கள் பெருமளவில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற வியாபாரிகளைக் காட்டிக் கொடுப்பதில்லை என வாழைச் சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களைக் கைது செய்வதற்குப் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் மாத்திரம் போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்ய முடியும்.

### மக்களின் கைகளிலேயே உள்ளது

பொது மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கினால், கல்குடாப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மாணவர்கள் மத்தியில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க முடியும். இல்லையேல், அது அதிகரித்த வண்ணமே காணப்படும். போதைப்பொருள் பாவனையை ஒழிப்பது மக்களின் கரங்களிலே உள்ளது. ஊரடங்கு வேளையில், வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவில் பல்வேறுபட்ட சட்டவிரோதச் செயல்கள் நடைபெற்று வருவதாகவும், இதனைத்தடுக்கும் வகையிலும், குற்றவாளிகளைக் கைது செய்யும் வகையிலும் பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். எனவே, ஓட்டமாவடி, மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாணவர்கள் மற்றும் பிள்ளைகளின் நலனின் அக்கறை கொண்டு பெற்றோர்கள், பொது மக்கள் இந்த விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்த வேண்டும். போதைப்பொருள் வியாபாரிகளுக்கு பயந்து தங்களது பிள்ளைகளின் வாழ்க்கையைச் சீரிழிக்கக் கூடாது.

### தமிழ், முஸ்லிம் இளைஞர்கள்

தமிழ்ப்பிரதேசங்களில் வாழும் இளைஞர்கள் மத்தியில் மதுப்பாவனை அதிகமாக உள்ள போது, முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின், போதை மாத்திரை, கஞ்சா உட்பட்ட பொருள்கள் பாவனையிலுள்ளன. பெரும்பாலும் இவ்வாறான பழக்கம் 15 வயது தொடக்கம் 25 வயதுடைய இளைஞர்களிடத்தில் காணப்படுகின்றது. ஏனெனில், குறித்த வயது உணர்வுக்கு முக்கியத்தும் வழங்கின்றது. இந்த வயதுடைய மாணவர்களை இலகுவில் ஏமாற்ற முடியும். தங்களது வயதில் போதைப்பாவனையை மேற்கொள்ளச் செய்தால், அவரர்கள் தொடர்ந்து போதைப்பாவனையில் ஈடபடுவார்கள் என்ற எண்ணத்தில் இவ்வாறான செயல்களை மாணவர்களின் மத்தியில் செய்கின்றனர்.

### வாகன விபத்துகளுக்குக் காரணம்

இளைஞர்கள் போதைப்பொருள்களைப் பாவித்து வாகனங்களைச் செலுத்துவதால் இலங்கையில் அதிக விபத்துக்கள் இடம்பெறக்காரணமாக அமைகின்றது. போதைப்பொருள்களைப் பாவித்த பின்னர் போதை உண்டாகும் பட்சத்தில், வாகனத்தைச் செலுத்தும் போது, முன்னால் வரும் வாகனத்தின் தூரத்தைச் சரியாகக் கணிக்க முடியாமல் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. எனவே, எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வின் ஒளியேற்றும் வகையில் மட்டக்களப்பு வாழ் பொது மக்கள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவப் புலனாய்வுப்பிரிவினர், பிரதேச மட்ட அமைப்புக்கள், பள்ளிவாசல் நிருவாகத்தினர் இதில் கூடிய அக்கறை செலுத்திப் போதைப்பொருள் வியாபாரத்தை அடியோடு ஒழிக்க முன்வர வேண்டும்.

# சுகாதாரப் பாதுகாப்பு எதுவுமின்றி வவுனியா நகர சுத்திகரிப்பாளர்கள்

## அதிகாரிகள் அக்கறையில்லை என சமூக ஆர்வலர்கள் விசனம்







கொரோனா பெருந்தொற்று காலத்திலும் சுகாதாரப் பாதுகாப்பு ஏதுமின்றி வ வுனியா நகர சபை சுத்திகரிப்பு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றார்கள், அது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கொரோனா காலத்தில் வெளியில் நடமாடும் மக்களுக்கான சுகாதாரக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் சுகாதாரத் துறை அறிவுறுத்தலின்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

முகக் கவசம் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அடிக்கடி கைகழுவ வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை அகற்றும் சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மாஸ்க் அணியாமலும், கையுறைகள் அணியாதும் கழிவுகளை அள்ளி அதனை வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றனர்.

வெறுங் கைகளால் குப்கைகளை அகற்றிவரும் இவர்கள் கைகளைக் கழுவாமல் நீண்ட நேரத்திற்கு நகரின் பல பகுதிகளுக்கும் சென்று இவ்வாறு சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியோ பொதுச் சுகாதார அதிகாரிகளோ நகர சபையோ இது குறித்து அக்கறை எடுக்கவில்லை என்று சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுத்திகரிப்பு ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# சிவகுமரன் நினைவேந்தல் இம்முறை வலி. கிழக்கு பிரதேச சபை ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முதல்வித்து என அரசியல்வாதிகளால் போற்றப்படும் பொன். சிவகுமாரனின் நினைவுதினம் இம்முறை வலிகாம ம் கிழக்கு பிரதேச சபையினால் எதிர்வரு ம்6ஆம் திகதி சனிக்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

உரும்பிராய்ச் சந்தியில் சிவகுமாரனின் உருவச் சிலை அமைந்துள்ள இடத்தில் காலை 9.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் என்று வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பொன் சிவகுமாரனின் 44ஆவது ஆண்டு நினைவுதினம் இது.

உரும்பிராயைச் சொந்த இடமாகக் கொண்ட பொன் சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சயனட் அருந்தி மாலை 6.15 மணிக்கு வீரச்சாவடைந்தார்.

சிவகுமாரனின் நினைவு நாள் 5ஆம் திகதி என்றபோதும் அன்றைய தினம் நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் இருப்பதால், மக்களின் அஞ்சலிக்கு வசதியாக நிகழ்வுகள் மறுநாள் 6ஆம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

இம்முறை உரைகள் எதுவும் இடம்பெறமாட்டாது. அதேவேளை உரிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள், சமூக இடைவெளியுடன் அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. அஞ்சலி செலுத்தப்படவுள்ள பகுதி ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டு தொற்று நீக்கமும் செய்யப்பட்டுள்ளது. கலந்து கொள்பவர்கள் முகக்கவசங்களை அணிந்திருப்பது கட்டாயமானதாகும் என்றார் நிரோஷ்.

அகவணக்கத்தினைத்தொடர்ந்து பொது ஈகச் சுடரினை பொன். சிவகுமாரனின் குடும்பத்தினரும் அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்துதல் என்பன இடம்பெறும்.

**கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில்**

# வரி கட்டாதோருக்கு தண்டம் கிடையாது

*கொழும்பு, ஜூன் 4*

*கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலங்களில் வருமான வரி செலுத்த முடியாமல் போனவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.*

*அமைச்சரவைதீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவை இணை பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் வினால் குறித்த பத்திரம் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், அமைச்சரவை குறித்த தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

# பாடசாலைகள் தொடங்கிய பின்பே ஓ.எல், ஏ.எல். பரீட்சை குறித்த முடிவு

கொழும்பு, ஜூன் 4

க.பொ.த உயர்தர பரீட்சை மற்றும் புலமைபரிசீல்பரீட்சைகளைநடத்துவது தொடர்பில்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் ஒகஸ்ட் மாதம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதால் பரீட்சைகள் தாமதமாகுமா என பரீட்சைகள் ஆணையாளரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்தவர், நாட்டின் தற்போதைய நிலைமையை நாங்கள் அவதானித்து வருகின்றோம். இன்னமும் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே பரீட்சைகள் தொடர்பில் ஏதாவது தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இருநாள் ஊரடங்கால் முழுதாக முடங்கியது வடக்கு மாகாணம்

நாடளாவியரீதியில்கொரோன வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இன்றும்நாளையும்ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் வடக்கில் இயல்பு வாழ்க்கை மீண்டும் முடக்கத்திற்குச் சென்றுள்ளது.

ஊரடங்கு உத்தரவு மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல்கள் கடந்த சில நாள்களாகத் தளர்த்தப்பட்டதை அடுத்து இயல்புக்குத் திரும்பிக்கொண்டிருந்த பொது வாழ்க்கை இன்று காலை மீண்டும் முழு முடக்கத்திற்குச் சென்றது.

கடைகள், சந்தைகள் எவையும் திறக்கப்படவில்லை. பொதுப் போக்குவரத்து சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. அரச அலுவலகங்களுக்கு ஆட்சியாளர்கள் பொது விடுமுறை அறிவித்த தனால் அவையும் மூடப்பட்டே இருந்தன.

அத்தியாவசிய தேவைகள் தவிர மக்கள் தமது வெளி நடமாட்டத்தை முழுமையாகத் தவிர்த்திருந்தார்கள்.

பொசன் போயா விடுமுறைகளையொட்டி இன்றும் நாளையும் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறக்கப்பட்டதால் முல்லைத்தீவு மாவட்டம் முழு அளவில் வெறிச்சோடியிருந்தது.

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இராணுவச் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு வீதியில் அவசியத் தேவைகளுக்காகப் பயணிக்கின்றவர்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். நகர்ப் பகுதிகளிலும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.









# இணுவிலில் ஓட்டோ தீ வைத்து எரிப்பு



யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

இணுவில் பாலாவோடை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியே நேற்றிரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டி பகுதியளவில் எரிந்து நாசமாகியுள்ளதாகக் கூறிய பொலிஸார் என்ன காரணத்திற்காக இப்படிச் செய்யப்பட்டது என்பது தெரியவில்லை என்று கூறினர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாலத்தில் இரும்புகள் திருடிய மூன்று பேர் விளக்கமறியலில்



கிளிநொச்சி, ஜூன் 04

கிளிநொச்சி, பரந்தன் – பூநகரி வீதியில் 14 ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள குடமுருட்டி பாலத்தின் இரும்புகள் கடந்த மாதம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த கிளிநொச்சிப் பொலிஸார், கிளிநொச்சி கனகபுரம் வீதியில் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை காரியாலயத்துக்கு முன்பாக உள்ள இரும்புத் தொழிலகம் ஒன்றில் பாலத்தின் பாகங்கள் அறுக்கப்பட்ட நிலையில் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

அத்தோடு பாலத்தின் மற்றொரு தொகுதி பாகங்கள் கிளிநொச்சி ஏ – 9 வீதியில் 155 ஆம் கட்டைப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இப் பாகங்களின் பெறுமதி ஒரு கோடி ரூபா முதல் ஒன்றறை கோடி ரூபா வரை என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இரும்புக் கடை ஒன்றின் முதலாளி உட்பட மூவர் கைது செய்யப்பட்டு பொதுச் சொத்துக்களைத் திருடினர் என்ற குற்றத்தின் பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

# முல்லை. மாவட்ட சுகாதார பணியாளர்கள் கவனத்திற்கு

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு இம்முறை சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பணியாளர்கள் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் தமது தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்

2020 நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சுகாதார சேவைகள் பணிக்குழுவினரின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாக உள்ளமையால் தேர்தல் சம்பந்தமாக கோவிட் – 19 தொற்று பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட உள்ள சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கின்ற வைத்திய சாலைகள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் போன்றவற்றில் கடமையாற்றும் சுகாதார சேவை பணி குழுவினர் இந்த தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள்.

தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி நேற்று மே 3ஆம் திகதியுடன் முடிவடைந்தபோதும் அதனை தேர்தல்கள் ஆணையாளர் 8ஆம் திகதி வரையும் நீடித்திருக்கிறார். எனவே அதற்கிடையில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணியாளர்களை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.




ஏற்கனவே இது குறித்த விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பன பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊடாக அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# ஏறாவூரில் இளம் பெண் கழுத்து நெரித்து கொலை

## சந்தேகத்தில் கணவர் பொலிஸாரால் கைது

ஏறாவூர் ஐயங்கேணி பகுதியில் 24 வயது இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார். சந்தேகத்தின் பேரில் அவரது கணவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஐயங்கேணி பகுதியைச் சேர்ந்தவரான அப்துல்காதர் ஷியாமியாவே கொலை செய்யப்பட்டார். அவரது கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது கணவரான கொழும்பு 9, ஊருகொடவத்தையைச் சேர்ந்த மொகமது சபீக் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவர்கள் இருவருக்கும் 9 நாள்களுக்கு முன்னரே திருமணம் நடந்தது.

ஷியாமியா அடித்துத் துன்புறுத்தப்பட்ட பின்னர் வயரால் அவரது கழுத்து நெரிக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்கேிக்கின்றனர்.

கணவர் நவாஸ் விவாகரத்தானவர். முதல் திருமணத்ன் மூலம் அவருக்கு ஒரு குழந்தையும் இருக்கின்றது. அவருக்குப் போதைப் பொருள் பயன்படுத்தும் பழக்கமும் இருக்கின்றது என்கின்றனர் பொலிஸார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிசார் தொடர்கின்றனர்.

# மட்டு. வீதி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 04

மட்டக்களப்பு பாசிக்குடா வீதி பேத்தாழையில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞன் ஒருவன் உயிழந்தார்.

பிறைந்துறைச்சேனை வாழைச்சேனையைச் சோந்த எம்.என்.முகம்மது நைறூஸ் வயது (18) என்ற இளைஞனே உயிழந்தார்.

குறித்த இளைஞன் வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து பாசிக்குடாவிற்கு மோட்டார் சைக்கிளில் செல்லும்போது விபத்து நடந்தது.

எதிரே சென்ற சிறிய கென்ரா ரக வாகனம் சடுதியாக வீதியை விட்டு மறு பக்கம் செல்ல முற்படுகையில் பின்னால் சென்றவா தமது வேக கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளார். இதனால் கென்ரா வாகனத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

கல்குடா பொலிசா சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மெற்கொண்டதுடன் சந்தேகத்தின் போல் கென்ரா சாரதியை கைது செய்துள்ளமையுடன் கென்ரரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

# கொரொனா சோதன செய்ய மறுத்த அமெ. ராஜதந்திரி!

*கொழும்பு, ஜூன் 04*

*கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரியும் பெண் இராஜதந்திரி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை செய்வதற்கு அனுமதிக்காமல் வெளியேறிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*தூதரகப் பணியாளரின் சிறப்புரிமைக்கு அமைய அவருக்கான பி.சி.ஆர். பரிசோதனையை செய்யமறுத்தபடியினால் அவரை நாட்டிற்குள் அனுமதிக்க நேரிட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*

*இந்த சம்பவமானது இன்று வியாழக்கிழமை அதிகாலை 1.30 அளவில் இடம்பெற்றிருக்கிறது.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2020 இல் வெளியிடப்பெற்றது.